பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

29 09 2024 **SUNDAY** **6.30 PM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தூய்மை இந்தியா இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு பாடுபட்ட அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது, மன் கி பாத் உரையில் பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் அதிக அளவில் நேரடி அந்நிய முதலீடுகளை கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பிஜேபி இணைப்பொறுப்பாளர் திரு சுதாகர் ரெட்டி கூறியுள்ளார்.

3. தமிழக அமைச்சர்களாக திரு செந்தில் பாலாஜி, திரு கோவி. செழியன், திரு ராஜேந்திரன், திரு நாசர் ஆகியோர் இன்று பதவியேற்றனர். அவர்களுக்கான துறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

4. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா – பங்களாதேஷ் இடையேயான இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமும் மழை காரணமாக இன்று ரத்து செய்யப்பட்டது.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

தூய்மை இந்தியா இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு அரும்பாடுபட்ட அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் 114-ஆவது நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர், கடந்த பத்தாண்டுகளாக மக்களிடையே தூய்மை இந்தியா இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - பிரதமர் (1) – 41 செகண்ட்ஸ்)*

நமது நாட்டின் தொன்மை சிறப்புமிக்க கலாச்சாரத்தின் சின்னங்களாக விளங்கும் படைப்புகளை மீட்டுக்கொண்டுவருவதற்கு மத்திய அரசு முழுவீச்சில் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தமது அமெரிக்க பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு ஜோ பைடன், 300-க்கும் மேற்பட்ட இந்திய கலை பொருட்களை ஒப்படைத்திருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தி என்றும் பிரதமர் கூறினார்.

“அன்னையின் பெயரில் ஒரு மரம் இயக்கம்” மக்களின் பங்களிப்போடு சிறப்பாக செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் தொலைதூர பகுதிகளிலும் இந்த திட்டம் வெற்றிபெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது மன்கிபாத் நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

*(வாய்ஸ் பைட் - பிரதமர் (2) – 51 செகண்ட்ஸ்)*

சமுதாய வானொலி மூலம், படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், **Create in India** என்ற மிகப்பெரும் வாய்ப்பை அளித்திருப்பதாக குறிப்பிட்ட பிரதமர், இதில் பங்குபெற்று படைப்பாளிகள் தங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

பண்டிகை காலங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வரும் நாட்களில் பண்டிகை காலம் தொடங்கவுள்ளதை சுட்டிக்காட்டி, நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி, கூறினார்.

*(வாய்ஸ் பைட் - பிரதமர் (3) – **52** செகண்ட்ஸ்)*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

<<<<<<>>>>>

தமிழக அமைச்சரவையில் நான்கு புதிய அமைச்சர்கள் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.

சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திரு. செந்தில் பாலாஜி, டாக்டர் கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோருக்கு ஆளுநர் திரு ஆர் என் ரவி, பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்துவைத்தார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அவர்கள் பதவியேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள், உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

திரு செந்தில் பாலாஜிக்கு, மின்சாரம், மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை, மரபுசாரா எரிசக்தித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு கோவி. செழியனுக்கு, உயர்கல்வித்துறை, மின்னணுவியல் அறிவியல் தொழில்நுட்பத்துறையும்,

திரு ஆர் ராஜேந்திரனுக்கு சுற்றுலா, சர்க்கரை மற்றும் கரும்புப்பயிர் மேம்பாட்டுத்துறையும்,

திரு நாசருக்கு, சிறுபான்மையினர் நலத்துறை, வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை, வக்ஃப் வாரியத்துறை அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கா. ராமச்சந்திரன் அரசின் தலைமை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மத்தியில் பத்தாண்டுகளுக்கு மேல் சிறப்பாக செயல்பட்டுவரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு அனைத்துத்தரப்பு மக்களுக்குமான நலத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக பிஜேபி-யின் இணைப்பொறுப்பாளர் திரு சுதாகர் ரெட்டி தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் அதிக அளவில் நேரடி அந்நிய முதலீடுகளை கொண்டுவர மத்திய அரசு அதிக கவனம் செலுத்தியதாகவும் தெரிவித்தார்.

சாலை, ரயில்வே மற்றும் விமான போக்குவரத்து, பிரதமரின் வீட்டு வசதி, விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம், ஆயுஷ்மான் பாரத்,

முத்ரா கடனுதவி, போன்றவை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த திட்டங்களின் பயன்கள் பற்றி சரியாக புரிந்துகொள்ளாமல் எதிர்க்கட்சிகள் அவற்றை விமர்சித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளதாகவும் திரு சுதாகர் ரெட்டி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

சிவகங்கை மாவட்டம் கீழடிக்கு மத்திய சுற்றுலாத்துறையில் சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளத்திற்கான விருது கிடைத்துள்ளது.

தில்லியில், குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரிடமிருந்து இந்த விருதினை பெற்றுக்கொண்டபின், எமது செய்தியாளருக்கு பேட்டி அளித்த கிராம ஊராட்சித்தலைவர் திரு வெங்கட சுப்பிரமணி, கீழடியில் இரண்டாயிரத்து 600 ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - முருகன் - 51 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டத்தில், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு காந்தி, மாநில அளவில் நடைபெற்ற சைக்கிளிங் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

-------------

உலக இருதய தினத்தை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. இதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றும் மழை பாதிப்பு காரணமாக ரத்து செய்யப்பட்டது.

கான்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது.

முதல் நாளில், பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 107 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதன் காரணமாக ஆட்டம் முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்பட்டது.

<<<<<<END>>>>>